**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 44 of 2024

DATE : 03.10.2025

Depositions of witness for Prosecution

PW: 5

| Name | அருண்பாண்டியன் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | பாண்டியராஜன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of October 2025

**(3 மற்றும் 5 எதிரிகள் ஆஜர். 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு பாபு சாமி ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

நான் தற்பொழுது சென்னை தீவிரவாத தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.01.2016 அன்று காலை 10 மணிக்கு வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் இருந்து Crl. O. P. No. (MD) 24076/2015 ன் படியாக வரப்பெற்ற உத்தரவின் இணைப்பில் கண்ட மனுவினை பார்வையிட்டு புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப காவல் நிலைய குற்ற எண் 20/2016, பிரிவுகள் 420, 109, 448, 294(b), 323, 506(1) IPC ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் முன்னிலையில் சமர்ப்பித்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : –**

முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதி எப்போது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 22.11.2015 ஆகும். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதியிலிருந்து 2 மாதங்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற பின்பு புகார்தாரர் நேரடியாக காவல் நிலையம் வந்து புகார் கொடுக்காததால் சம்பவம் குறித்த உண்மை விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் இருந்து கிடைக்கப்பெற்ற உத்தரவின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையை நான் பதிவு செய்தேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை : – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு